கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றம்
மறை வளர ஒன்றிணைவோம்
2025


# தாய்


கத்தோலிக்க சஞ்சிகை - ஆரம்பம் 1997

தை – மாசி    தாய்–28    சேய்–167








வெளியீடு – கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றம்.    (0094) 777 289960    விலை–60/-











POPE FRANCIS
Sri Lanka 2015


# MOUNT OLIVE (HOME MADE)

- Rich Cake
- Love Cake
- Dates Cake
- Fruit Cake
- Chocolate Cake (with hand icng)
- Butter Cake
- Muffins & Cookies
- Grape Wine



**Will be done for order**
**Contact : 0773672113**




விடுதலை அளிப்பவர் ஆண்டவர், அவர்தம் மக்களுக்கு ஆசி வழங்குவாராக!

தாய்
THAAI
எமது எண்ணம்

January - February 2025
P.O. Box: 1233, Colombo
Mobile: 077 7289960
e.mail:anandapulle@yahoo.com
anandapulle@hotmail.com
www.colombostjosephvazmandram.lk

எதிர் நோக்கின் திருப்பயணிகள் என்ற யூபிலி ஆண்டின் கருப்பொருளோடு யூபிலி பயணத்தில் நாம் அனைவரும் இணைந்துள்ளோம். இத் திருப்பயணமானது ஒரு நாளுக்கோ, மாதத்திற்கோ, வருடத்திற்கோ உட்பட்டது அல்ல மாறாக அது தான் எமது விசுவாச பயணம். இந்தப்பயணத்தை எதிர்நோக்கத்தோடு கிறிஸ்துவை நோக்கி பயணிப்போம். ஏழை எளியவர்கள்மீது அதிக கரிசனை காட்டுவோம். பகைமைகளை களைவோம், மன்னிப்பு பெறுவோம். மன்னிப்பு கொடுப்போம். தாழ்ச்சி என்னும் புண்ணியத்தில் வளர முயற்சிப்போம். தூய சிந்தனைகளை எம் இதயத்திலும், எம்மைச் சூழ்ந்துள்ளவர்களின் இதயத்திலும் விதைப்போம்,. பரபரப்பான உலகத்திலே செப வாழ்வுக்கு நேரம் ஒதுக்குவோம். விவிலியம் வாசித்து தியானிக்க முற்படுவோம் இவ்வாறு இன்னும் பல வழிகளில்
இவ் யூபிலி ஆண்டை அர்த்தமுள்ளதாக திடசங்கற்பம் கொள்வோம்.

மன்னார் ஆயராக தெரிவு செய்யப்பட்டிருக்கும் தேர்வு நிலை ஆயர் அருட்தந்தை ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை அடிகளாருக்கு எமது வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு, அவரின் பணிவாழ்வுக்காகவும் ஜெபிக்கின்றோம்.

மேலும் தை 16ம் திகதி புனித ஜோசப்வாஸ் அடிகளாரின் திருவிழாவை கொண்டாடினோம். அவருக்கு இறைவன் மீதிருந்த பக்தி ஆர்வம் எமது தாய்த்திருநாட்டை விசுவாசத்தில் ஊரச்செய்தது. அவருடைய பரிந்துரையோடு நாமும் எமது விசுவாசத்தை ஒருவருக்கொருவர் எடுத்துச் செல்லும் கருவியாக செயற்படுவோம். கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றத்தால் வருடாந்தம் ஒழுங்கு செய்யப்படும் கொழும்பு பெரிய சிலுவைப்பாதை இவ் வருடம் பங்குனி மாதம் 9ம் திகதி இடம்பெறும். உங்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம். இச் சிலுவைப்பாதை எமது தவக்கால பக்தி முயற்சிகளுக்கு இவ்வருட பாஸ்காவை அர்த்தமுள்ளதாக ஆரம்பிக்க உறுதுணையாக இருக்கும் என்பது எமது நம்பிக்கை.

## தாய் நிர்வாகம்

**பிரதம ஆசிரியர்**
அருட்பணி. ஆனந்தன் பெர்னாண்டோபுள்ளே
☎ : 0777 289960

**ஆசிரியர்**
அருட்பணி. ஒனாசியஸ் பெர்னாண்டோ
☎ : 0770 090005

**சஞ்சிகை நிர்வாகம்**
திருமதி. டயனா ரமேஸ் - ☎ : 0775 594399
JVM சிரேஷ்ட பெண்கள் குழு

**சஞ்சிகை நிர்வாக ஒருங்கிணைப்பாளர்**
திரு. எனஸ்டன் பெர்னாண்டோ - ☎ : 0774 985940
✉ : enestons@gmail.com

**துணை ஆசிரியர்கள்**
திருமதி. சுமதி கோமஸ் - ☎ : 0773 672113
திரு. ஜெயக்குமார் பெர்னாண்டோ - ☎ : 0777 781275

**கணனி வடிவமைப்பு**
Mr. Ferdinand Devota

**இணையத்தளம்**
www.colombostjosephvazmandram.lk

# யூபிலி ஆண்டு செபம்

விண்ணகத் தந்தையே!

உம் திருமகனும் எம் சகோதரருமான / இயேசுக் கிறிஸ்துவில் /
நீர் எங்களுக்கு வழங்கிய இறைநம்பிக்கையும்,/ தூய ஆவியாரால் /
எம் இதயங்களில் / பற்றியெரியும் பிறரன்புச் சுடரும் /
உமது அரசின் வருகைக்காக / ஆசீர்வதிக்கப்பட்ட எதிர்நோக்கை /
எம்மில் மீண்டும் தட்டி எழுப்புவதாக. /

நற்செய்தியின் விதைகளை /அயராமல் விதைப்பவர்களாக / உமது அருள் எம்மை மாற்றுவதாக./ அவ்விதைகள் /மானுடத்திற்குள்ளும் / பிரபஞ்சம் முழுவதிலும் / மாற்றத்தை ஏற்படுத்தி, தீமையின் ஆதிக்கம் மறைந்து,/ உமது மாட்சி முடிவின்றி ஒளிரும்போது,/ உறுதியுடன் எதிர்பார்க்கும் / புதிய விண்ணகத்தையும் / புதிய மண்ணகத்தையும் / ஏற்படுத்துவதாக./

யூபிலிக் கொண்டாட்டத்தின் அருள்,/ எதிர்நோக்கின் திருப்பயணிகளாகிய
எம்மில் / விண்ணக செல்வத்துக்கான பேரார்வத்தை /
தூண்டி எழுப்புவதாக. / அதே அருள் / நம் மீட்பரின் மகிழ்ச்சியையும்
அமைதியையும் / உலகம் முழுவதும் பரப்புவதாக. / முடிவின்றி
போற்றுதலுக்குரிய / எம் இறைவனாகிய உமக்கே / மாட்சியும் புகழும் /
என்றென்றும் உரித்தாகுக. / ஆமென்.

– திருத்தந்தை பிரான்சிஸ் –

*கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர்*
*அதி வணக்கத்துக்குரிய மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை*
*துணை ஆயர் மேதகு என்டன் ரஞ்சித் ஆண்டகை*
*ஆகியோர் கலந்து சிறப்பிக்கும்*

## கொழும்பு பெரிய சிலுவைப்பாதை

*இச் சிலுவைப்பாதையானது புதுச்செட்டித்தெரு*
*புனித வியாகுல மாதா ஆலய முற்றத்தில்*
*ஆரம்பமாகி, கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயம்*
*வழியாக செக்கடித் தெரு, அன்னை வேளாங்கண்ணி*
*ஆலயத்தின் ஊடாக வந்து கொட்டாஞ்சேனை,*
*புனித லூசியாள் பேராலயம்*
*முன்பாக திருப்பலியுடன் முடிவடையும்.*

**ஏற்பாடு : கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றம்**



**நாள் : 09.03.2025**
**நேரம் : பி.ப. 3.15**
**ஆரம்பம் : புனித வியாகுலமாதா ஆலயம்**
**முடிவு : புனித லூசியாள் பேராலயம்**

இப்பக்தி முயற்சியில் பங்குபெற அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.



ஆண்டவர் போற்றி! போற்றி! ஏனெனில், அவர் என் கெஞ்சும் குரலுக்குச் செவிசாய்த்தார்.

# யூபிலி ஆண்டில் நான்...

பழைய ஏற்பாட்டு காலத்திலிருந்து யூபிலி ஆண்டானது 50 ஆண்டுகளுக்கு ஒருமுறை கொண்டாடப்பட்டு வந்தது. இது கி. பி. 1300 ஆம் ஆண்டிலிருந்து 25 ஆண்டுகளுக்கு ஒருமுறை கொண்டாடப்படுகிறது. இந்த யூபிலி ஆண்டானது இயேசு பிறப்பின் மகிழ்வை நமக்குத் தருகின்றது. இயேசு பிறப்பின் யூபிலி ஆண்டை நாம் 2000 ஆம் ஆண்டு கொண்டாடினோம். அதன் பின் விசேட யூபிலி ஆண்டாக இரக்கத்தின் ஆண்டு 2015ம் ஆண்டு நமக்குத் தரப்பட்டது. 2033 ஆம் ஆண்டு இயேசுவின் பாடுகள் மரணம் உயிர்ப்பு பாஸ்கா மறை பொருளின் யூபிலி ஆண்டாக, விசேட யூபிலி ஆண்டாக பிரகடனப்படுத்தப்படவிருக்கின்றது.

இந்த யூபிலி ஆண்டானது உரோமையில் திருத்தந்தையினால் டிசம்பர் 24, 2024 அன்று புனித பேதுரு பெருங்கோயில் யூபிலி தூய கதவு திறந்து வைக்கப்பட்டதோடு ஆரம்பமானது. நம்முடைய மறைமாவட்டங்களிலே யூபிலி சிலுவை பொருத்தப்பட்டு அது மக்களின் ஆராதனைக்காக பேராலயத்திலேயே வைக்கப்படும். யூபிலி சிலுவையை பார்க்கிற ஒவ்வொருவருக்கும் ஆண்டவருடைய இரக்கத்தை அடைந்து கொள்ள நமக்கு அழைப்பு தரப்பட்டிருக்கிறது. இந்நிலையில் திருத்தந்தை தந்த அழைப்பின்படி பல்வேறு ஆயத்தங்களோடு யூபிலி ஆண்டுக்குள்ளே நுழைகின்ற எனக்கு யூபிலி ஆண்டு தருகின்ற செய்தி என்ன? நான் இந்த யூபிலி ஆண்டில் எவ்வாறு வாழலாம்? யூபிலி ஆண்டை நான் எவ்வாறு கடைப்பிடிக்கலாம்?

“எதிர்நோக்கு ஒரு போதும் ஏமாற்றம் தராது” (உரோ 5:5) எனும் இறைவார்த்தையை மேற்கோள்காட்டுகின்ற திருத்தந்தை இந்த யூபிலி ஆண்டிலே நாம் ஒவ்வொருவரும் எதிர்நோக்கை வலுப்படுத்திக்கொள்ள அழைப்பு தருகின்றார். வாழ்க்கைச் சூழ்நிலையிலே பல்வேறுபட்ட பிரச்சினைகள், சந்தேகங்கள், நோய்கள், சோர்வுகள், எதிர்காலம் தொடர்பான கவலைகள் போன்ற பல்வேறு தளம்பல்கள் காரணமாக, வாழ்வில் நிலைகுலைந்து பொருள் மறந்து வாழ்கின்ற மக்களுக்கு வாழ்வளிப்பதாக இவ் ஆண்டு அமைய வேண்டும் என்று திருத்தந்தை ஆசிக்கிறார். அவர் நம்மிடம் மூன்று முக்கியமான காரியங்களை செய்து முடிக்குமாறு கேட்கிறார்.

1. உண்மை கிறிஸ்தவர்களாக மாற வேண்டும்.

JUBILEE YEAR

2025

**நம்பிக்கையின் திருப்பயணிகள்**

2. இதன் வழியாக நம் மீட்பின் நுழைவாயில் இயேசுவோடு உறவு கொள்ளுதல், உறவை கட்டி எழுப்புதல்.
3. திருஅவைக்கு கொடுக்கப்பட்ட மறைபரப்பு பணியை செயல்படுத்தல்.

நாளாந்த வாழ்வின் அனுபவங்களை கடவுளிடம் அர்ப்பணிக்க கூடிய செப அனுபவத்தோடு நாம் இந்த ஆண்டிலேயே பயணித்தால் இயேசுவோடு கொள்ளும் உறவும் அயலவரோடு கொள்ளும் உறவும் சாத்தியமாகும்.

எதிர் நோக்கின் அடையாளமாக மாறிட நான் என்ன செய்ய வேண்டும்?

1. திரு யாத்திரைகள் திருப்பயணங்கள் மேற்கொள்ள வேண்டும். இவற்றின் இறுதியில் நான் பாவ மன்னிப்பு பெற்று கிறிஸ்துவோடு உள்ள உறவில் எதிர்நோக்கை வலுப்படுத்த வேண்டும்.
2. உலக சமாதானத்திற்காக செபிக்க வேண்டும். குழந்தை செல்வங்களை பெறுவதற்கு ஊக்குவிக்க வேண்டும்.
3. சிறைப்பட்டோர்க்கு, அவர்களது குடும்பத்தாருக்கு எதிர்நோக்கை வழங்குதல்.
4. வைத்தியசாலைகளிலும் வீடுகளிலும் இருக்கின்ற, மருத்துவ செலவுகளை சந்திக்க முடியாமல் இருக்கிற நோயாளிகளுக்கு, அவர்களை பாராமரிப்பவர்கள், உதவி செய்கின்றவர்கள், குடும்பத்தார் வைத்தியசாலை ஊழியர்களுக்கு எதிர்நோக்கை வழங்குதல்.
5. வாழ்வில் சோர்ந்து, குடிவெறி போதைக்கு அடிமையாக இருக்கிற, எதிர்காலம் பற்றிய கவலையோடு வேலை வாய்ப்பில்லாமல் மனம் நொந்து போய் இருக்கிற இளையோருக்கு எதிர்நோக்கு வழங்குதல்.
6. குடும்ப வாழ்வில் சவால்களை எதிர்கொள்கின்ற இளம் தம்பதியினருக்கு எதிர்நோக்கை வழங்குதல்.
7. யுத்தம் மற்றும் வேலை வாய்ப்புகளுக்காக புலம் பெயர்ந்தவர்களுக்கு எதிர்நோக்கை வழங்குதல்.
8. தனிமையிலும் முதுமையிலும் வாழுகின்ற முதியோருக்கு எதிர்நோக்கை வழங்குதல்.

தொடர்ச்சி 22ம் பக்கம்

நல்லதையே ஆண்டவர் அருள்வார் நல்விளைவை நம்நாடு நல்கும்.



# 2025ம் ஆண்டிற்கான திருத்தந்தையின் செபங்களுக்கான வேண்டுதல்கள்



**தை:–**

**கல்விக்கான உரிமைக்காக :**

புலம்பெயர்ந்தோர்,அகதிகள் மற்றும் போரினால் பாதிப்புக்கு உள்ளானோருக்காக மன்றாடுவோம். நல்லுலகைக் கட்டியெழுப்ப அத்தியாவசியமான காரணியாகிய கல்விக்கான அவர்களது உரிமை பாதுகாக்கப்பட வேண்டுமென்று மன்றாடுவோம்.

**மாசி:–**

**குருத்துவ மற்றும் துறவற அழைத்தல்களுக்காக :**

குருத்துவ மற்றும் துறவற வாழ்வில் கிறிஸ்துவின் பணியை மேற்கொள்ள தாம் அழைக்கப்படுவதாக உணரும் இளம் வயதினருடைய அபிலாசைகள் மற்றும் தயக்கங்களை பங்குத் திருச்சபை வரவேற்க வேண்டுமென மன்றாடுவோம்.

**பங்குனி:–**

**குழப்பங்களில் மூழ்கியுள்ள குடும்பங்களுக்காக :**

சிதைந்து போயுள்ள குடும்பங்கள் தங்கள் பரஸ்பர வேறுபாடுகளின் மத்தியிலும் ஒருவர் மற்றவரின் கொடைகளை மீள்கண்டெடுத்து மன்னித்தலினூடாக தங்கள் வடுக்களுக்கான குணப்படுத்தலை கண்டுகொள்ள மன்றாடுவோம்.

**சித்திரை :–**

**நவீன தொழில்நுட்பங்களின் பாவனைக்காக :**

புதிய தொழில்நுட்பங்களின் பாவனையானது மனித உறவுகளுக்கு மாற்றீடாக அமையாது, மனித மாண்பை மதிக்கவும் சமகால நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கவும் உதவி புரியும்படியும் மன்றாடுவோம்.

**வைகாசி:–**

**தொழில்செய்யும் சூழலுக்காக:**

மனித உழைப்பினூடாக ஒவ்வொரு மனிதனும் நிறைவைக் கண்டடையவும், குடும்பங்கள் அறநெறியில் செழித்தோங்கவும், சமுதாயத்தின் மனித மாண்பு மேம்படவும் வேண்டி மன்றாடுவோம்.

**ஆனி:–**

**உலகு பரிவன்பில் உயர்வடைவதற்காக:**

ஒவ்வொருவரும் இயேசுவுடன் உள்ள தனிப்பட்ட உறவில் ஆறுதலைக்கண்டடையவும் அவரது திரு இருதயத்திலிருந்து உலகின்மேல் பரிவன்பு கொள்ளவும் கற்றுக்கொள்ள மன்றாடுவோம்.

**ஆடி:–**

**பகுத்தறிவாற்றல் மிக்க தீர்மானிக்கும் திறனின் மேம்பாட்டிற்காக:**

நாம் அனைவரும் மீண்டுமாக பகுத்தறிவுமிக்க தீர்மானிக்கும் திறனைக் கற்றுக்கொள்ளவும், கிறிஸ்துவிடமிருந்தும், நற்செய்தியிடமிருந்தும் எம்மைப் பிரிக்கும் அனைத்தையும் விட்டு விலகி வாழ்வின் வழியை தெரிவுசெய்யும் ஆற்றலை வளர்த்துக்கொள்ளவும் மன்றாடுவோம்.

**ஆவணி:–**

**பரஸ்பர கூட்டுறவிற்காக:**

கூட்டுறவு வாழ்வு பலவீனமாகவுள்ள சமூகங்கள், இன, மத, அரசியல் மற்றும் சித்தாந்த காரணங்களுக்காக பிளவுபடாமல் இருக்கவேண்டி மன்றாடுவோம்.

**புரட்டாசி:–**

**படைப்பனைத்தோடுள்ள எம் உறவிற்காக:**

எம் அன்பிற்கும் மதிப்பிற்கும் பாத்திரமானதும், கடவுளின் அன்பைப் பெற்றதுமான அனைத்து படைப்புக்களிடத்திலும் எமது தங்கியிருத்தலை புனித பிரான்சிஸ் அசிசியாரின் உந்துதலால் நாமனைவரும் உணர்ந்துகொள்ள மன்றாடுவோம்.

**ஐப்பசி:–**

**பல்வேறு சமய சம்பிரதாயங்களுடனான ஒத்துழைப்பிற்காக:**

பல்வேறுபட்ட மதச் சம்பிரதாயங்களுக்குரிய நம்பிக்கையாளர்களும் அமைதி ,நீதி மற்றும் சகோதரத்துவம் என்பவற்றைக் காக்கவும், ஊக்குவிக்கவும் ஒன்றாக இணைந்துப் பணியாற்ற வேண்டுமென்று மன்றாடுவோம்.

**கார்த்திகை:–**

**தற்கொலை தடுப்பிற்காக:**

தற்கொலை எண்ணங்களோடு போராடுகின்றவர்கள் தங்களுடைய சமூகத்தில் தங்களுக்குத் தேவையான அன்பு,கவனிப்பு,மற்றும் உதவியைக் கண்டுகொள்ளவும் வாழ்வின் மேன்மையையும் உணர்ந்துகொள்ளவும் வேண்டுமென்று மன்றாடுவோம்.

**மார்கழி:–**

**போர்ச்சூழலிலுள்ள கிறிஸ்தவர்களுக்காக:**

போர்ச்சூழலிலுள்ள கிறிஸ்தவர்கள், சிறப்பாக மத்தியகிழக்கிலுள்ளவர்கள் நம்பிக்கை, நல்லிணக்கம் மற்றும் அமைதியின் கருவிகளாகத் திகழும்படி மன்றாடுவோம்.

**Fr.கிளேரியன்**

# பொருளுள்ள ஞாயிறு திருப்பலி



**(அருட்பணி. எஸ். ஆரோக்கியராஜ் எழுதிய "திருவழிபாடு ஓர் அறிமுகம்" என்ற நூலிலிருந்து சில பகுதிகள்)**

## திருப்பலியில் தொடக்கச் சடங்குகள்

### 10. வானவர் கீதம்

மனத்துயர் வழிபாட்டின் மூலம் பாவ மன்னிப்பும், உளத் தூய்மையும் அடைந்த மக்கள் தங்கள் உள்ளத்தில் கடவுளின் அருள் ஒளி வீசுவதையும், அவர்கள் கடவுளைப் போற்றிப் புகழ்வதையும் வெளிப்படுத்தும் மகிழ்ச்சிக் கீதமே வானவர் கீதம் எனப்படும் "உன்னதங்களிலே" என்ற பாடல். எனவே இப்பாடலை உண்மையான மகிழ்ச்சியோடும் ஆர்ப்பரிப்போடும், ஆரவாரத்தோடும் இசை முழங்கப் பாட வேண்டும். இது பொதுவாக பெருவிழாக்களிலும், விழாக்களிலும் இடம் பெறும்.

### 10. சபை மன்றாட்டு

பொதுவாக வானவர் கீதத்தின் முடிவில் குரு "செபிப்போமாக" என்று சொல்லி, சபை மன்றாட்டைத் தொடங்குவார். ஒரு முறை, திருப்பலியின்போது "செபிப்போமாக" என்று சொன்னதும், மக்கள் நடுவில் இருந்த ஒருவன், "இதுவரை நாம என்னா செஞ்சிக்கிட்டிருந்தோம்? இப்பதான் புதுசா செபிக்கப் போறோமா?" என்றானாம். இதற்குக் காரணம் இதன் உட்பொருளை அவன் புரிந்து கொள்ளாததே.

அப்படியானால் "சபை மன்றாட்டு" என்றால் என்ன? என்பதை முதலில் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். அதாவது இதுவரை தனித்தனியாக செபித்துக் கொண்டிருந்த மக்கள், இப்போது ஒன்றாகச் சேர்ந்து, ஒரு குடும்பமாக, ஒரு "சபையாக" செபிக்கப் போகின்றார்கள் என்பதே இதன் உட்பொருள். அதனால்தான் இதற்கு "சபைச் செபம்" என்று பெயர் வந்தது.

எனவேதான் குரு "செபிப்போமாக" என்று கூறி, சிறிது நேரம் அமைதி காக்கின்றார். இந்த அமைதியைப் பயன்படுத்தி, அந்நேரத்தில் மக்கள் தங்கள் கருத்துக்களையும், மன்றாட்டுக்களையும், விண்ணப்பங்களையும், செபங்களையும் மௌனமாக விண்ணகத் தந்தையிடம் எழுப்புகிறார்கள். இதன் முடிவில் "கிறிஸ்துவின் பதிலாள்" என்ற முறையிலும், "வழிபடும் சமூகத்தின் தலைவர்" என்ற முறையிலும் குரு மக்களின் எல்லா மன்றாட்டுகளையும் இதய ஆவல்களையும் ஏக்கங்களையும் ஒட்டுமொத்தமாகச் சேர்த்து வானகத் தந்தையை நோக்கிச் செபிக்கிறார். இதை அவர் கிறிஸ்து வழியாகத் தந்தையை நோக்கி மன்றாடுகிறார். இவ்வாறு மக்களின் மன்றாட்டுக்களை ஒன்று சேர்த்து செபிப்பதால்தான், இது ஆங்கிலத்தில் "Collect" என்று அழைக்கப்படுகிறது.



ஆகவே, இது ஒரு குருத்துவச் செபம். இது வழிபாட்டுத் தலைவரின் செபம். எனவே இதைக் குரு மட்டுமே சொல்ல வேண்டும். குருவுக்குப் பதிலாக வேறு யாரும் இதைச் செபிக்கக் கூடாது. மக்கள் எல்லோரும் "ஆமென்" என்று சொல்வதன் மூலம் இச்செபத்தைத் தங்கள் செபமாக்கிக் கொள்கின்றனர்.

தொடரும்......

# அன்னை மரியாளின் பரிந்துரையும் பரித்தியாகமும்



நெடுங்காலம் பிள்ளை பேறின்றி இருந்த சுவக்கீன் அன்னமாள் தம்பதிகளுக்கு இறைவன் கருணையால் அன்னை மரியாள் மாசில்லா கன்னியாக உற்பவித்தார். கற்பு நெறி தவறாத கன்னியாகவே வளர்ந்தார். கடவுளுக்கு ஊழியம் செய்து வாழ்ந்து வந்தார். கடவுளோ தன் குமாரனை சுமக்கும் பேற்றை அவருக்கு வழங்கினார். அவரும் மனம் உவந்து அதை ஏற்றுக்கொண்டார். மாசில்லா குழந்தையாக உற்பவித்தார். கற்புநெறி தவறாத கன்னியாகவே வளர்ந்தார். அவர் வாழ்ந்து வந்த ஊர், சூழல் அவருக்கு எதிராகத் திரும்பப்பெறும் வாய்ப்பு இருந்தது. ஆனால் அவற்றையெல்லாம் அவர் மனதில் கொள்ளவில்லை. கடவுளின் சித்தத்தை, அவரின் திட்டத்தை பெரும் பேறாக ஏற்றுக் கொண்டார். தன்னையே தியாகம் செய்தார். என்ன நடந்தாலும் எது நிகழ்ந்தாலும் அவர் பார்த்துக் கொள்வார், பராமரிப்பார் என்ற தைரியம் நம்பிக்கை அவருள் பரிணமித்தது. நீதிமான் சூசைமுனியும் மரியாளோடு கூடவே இருந்து மிகுந்த பாதுகாப்பு அளித்து வந்தார். ஏரோது மன்னன் இரண்டு வயது நிரம்பிய தலைச்சன் குழந்தைகளைக் கொன்று விடும்படி கட்டளையிட்டபோது, நாட்டில் உள்ள தாய்மார்களின் உள்ளங்கள் எப்படி பேதலித்திருக்கும் அதே நிலை தான் அன்னை மரியாளுக்கும் ஏற்பட்டிருக்கும். அத்தனை வேலைகளுக்கு மத்தியிலும் குழந்தை இயேசுவை கயவர்களிடமிருந்து காப்பாற்ற தன்னையே தியாகம் செய்திருப்பார். மரியாளும், சூசைமுனியும் மறைவிடம் தேடி அலைந்திருப்பார்கள். கடவுள் அவர்களை கயவர்களின் கண்களில் தென்படாமல் காப்பாற்றி விட்டார்.

அவர் தன் இனத்தவரான எலிசபெத்தம்மாளும் தனது முதிர் வயதில் குழந்தை பேறு பெற்று, புனித திருமுழுக்கு அருளப்பரை மடி தாங்கும் பாக்கியம், கிடைத்ததை வான தூதர் வாயிலாக அறிந்து கொண்ட அன்னை மரியாள், அவர்களுக்கு பணி செய்ய நெடுந்தூரம் பயணம் மேற் கொண்டு தன் குழந்தை இயேசுவை சுமந்த நிலையிலும் தியாக உணர்வோடு தன்னையே வருத்திக்கொண்டார். பாஸ்கா திருவிழாவுக்கு சென்றிருந்த சமயம் பெற்றோரை கைவிட்டு, பன்னிரெண்டு வயது நிரம்பிய இயேசு, ஆலய அறிஞர்களுடன் உரையாடிக் கொண்டிருந்த போது, மூன்று நாட்கள் குழந்தையைக் காணாமல் மரியாவும், சூசையப்பரும் தேடி அலைந்து மிகுந்த வேதனைக்குள்ளானார்கள். தங்கள் அத்தனை பணிகளையும் கைவிட்டு, மகனைத் தேடுவதிலேயே மும்முரமாக ஈடுபட்டார்கள். மூன்றாம் நாள் முடிவில் ஆலயத்தில் அறிஞர் பெருமக்களுடன் தனது மகன் உரையாடிக் கொண்டிருப்பதைக் கண்டு பெரும் மகிழ்ச்சி அடைந்தார்கள். இயேசுவோ **"என்னை ஏன் தேடினீர்கள் எனது தந்தையின் பணிகளை நான் தொடரவே இங்கு வந்தேன்"** என்று பதிலளித்தார். இறைவனின் பணியை அவர் தொடர அவரது பெற்றோரும் தியாக உணர்வோடு விட்டுக் கொடுத்தனர்.

கானாவூர் திருமண வீட்டில் திராட்சை இரசம் தீர்ந்த போது, அன்னை மரியாளும் அங்கிருந்தார். தனது உறவினரான அவர்களுக்கு எந்தவித அவமானமும் வந்துவிடக்கூடாது என்ற நல்ல நோக்குடன், மகன் இயேசுவிடம் இரசம் தீர்ந்துவிட்டது ஏதாவது செய்ய முடியாதா? என்று கேட்க, இயேசுவோ என் வேளையோ இன்னும் வரவில்லை என்று பாராமுகமாக இருந்துவிட்டார். ஆனால் மரியாளோ விடவில்லை இயேசுவால் இந்த பிரச்சினையைத் தீர்த்து வைக்க முடியும் என்ற நம்பிக்கை அவருள் இருந்தது. ஆகவே அவர் சொல்கிறபடி செய்யுங்கள் என்று பரிந்துரைத்தார். அன்னையின் பரிந்துரையால், இயேசு செய்த முதலாவது புதுமை நிறைவேறியது. இது ஒரு உதாரணம் மட்டும் தான். மேலும் பல புதுமைகள் அன்னையின் பரிந்துரையால் நடந்திருக்கலாம். அவை விவிலியத்தில் இடம் பெறவில்லை. ஏன் இப்போதும் எங்களுக்காக இயேசுவிடம் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார் ஒரு தாய்மை உணர்வோடு.

-ஜெயக்குமார் பெர்னாண்டோ-



நான் உங்களுக்குச் சொல்கிறேன் “உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள்”

# மரியே வாழ்க!
## மரியாயின் சேனையின் ஆண்டு பொது ஒன்றிப்பு விழா

ஆண்டு பொது ஒன்றிப்பு விழா என்பது சேனையார்கள் அனைவரும் ஆண்டு இறுதியில் அமல உற்பவ மாதா திருநாளை ஒட்டிய ஒரு நாளில் கொண்டாடுகிறார்கள். ஒரு கியூரியாவின் கீழ் இயங்கும் பிரசீடியங்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து ஓர் தேவாலய மண்டபத்தில் மகிழ்ச்சி பொழுதுபோக்குடன் இவ்விழா ஆரம்பமாகும்.

இக் கூட்டத்தில் எல்லா நிகழ்ச்சிகளும் சேனையாளரால் மட்டும் நடாத்தப்படும். சேனையாளர்களுக்கு பொருத்தமான கட்டுரை நாடகங்கள் அன்னை மரியாளின் பாடல், சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படும். இவ் விழாவின் முக்கிய நோக்கம் சேனையாளர்கள் இடையே ஒற்றுமையை வளர்க்கவும் சேனையார் ஒவ்வொருவரையும் புரிந்து கொள்ளவும், எல்லோரிடத்திலும் அன்பு வளரவும்தான். எனவே சேனையாளர்கள் எல்லோரும் ஒன்றிணைவதன் மூலம் சேனைக்குள்ளே பல முன்னேற்றங்கள் ஏற்படும்.

சேனையார் மரியாவின் வெறும் கருவிகள் மட்டுமல்ல ஆன்மாக்களை ஈடேற்றிப் புனிதப்படுத்தும் அலுவலில் சேனையார் கன்னிமரியாவோடு ஒத்துழைக்கும் உடனுழியர்களாக விளங்குகிறார்கள்.



நீர்கொழும்பு கியூரியாக்கள்


# அன்னையர் தியானம்



இத்தியானமானது ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி சனிக்கிழமை
காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை
மருதானை, புனித பாத்திமா அன்னை ஆலயத்தில் நடைபெறும்.
இத்தியானத்திற்கு அனைத்து அன்னையர்களையும்
மற்றும் திருமணமான அனைத்து பெண்களையும்
கலந்து பயன்பெற அன்புடன் அழைக்கின்றோம்!

ஏற்பாடு : கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றம் பயிற்சி பணிக்குழு ( கனிஷ்ட பெண்கள் பிரிவு )

தொடர்புகளுக்கு :
0777249645 / 0767725745 / 0779807305


உனக்கு நான் முடிவில்லாத அன்பு காட்டியுள்ளேன்:

# புனித ஜோசப்வாஸ் அடிகளாரின் திருவிழா

கொழும்பு புனித ஜோசப் வாஸ் மன்றம் 1997ம் ஆண்டு தொடங்கப்பட்டது. தொடங்கப்பட்ட போது அடையாளம் தெரியாத ஒரு சிறிய விதையாக கொழும்பு நகரில் விழுந்து படிப்படியாக வளர்ந்த ஒரு மன்றம் என்று சொன்னால் மிகையாகாது. சில குருக்களின் பொது நிலையினரின் ஒன்று திரட்டப்பட்ட சிந்தனை செயல் வடிவம் பெற்றதுதான் இம்மன்றமாகும். கத்தோலிக்க தமிழ் மக்கள் தங்களுடைய ஆன்மீக தாகத்தையும் அதைத் தீர்க்க இருந்த வெற்றிடத்தையும் இம் மன்றம் காலப்போக்கில் நிரப்பத் தொடங்கியது. மக்கள் அதற்கு ஆதரவும் அரவணைப்பும் கொடுக்கத் தொடங்கினர். காலத்துக்கு காலம் ஒவ்வொரு பணியாக பணிகள் வரிசைப்படுத்தப்பட்டு ஒன்றன் பின் ஒன்றாக சேர்க்கப்பட்டு இன்றும் காலத்தின் தேவை அறிந்து புதுப்புது பணிகள் சேர்க்கப்பட்ட வண்ணமாக உள்ளது. மன்றம் தொடங்கி 8 வருடங்கள் ஆகும்போது மன்றத்தின் பாதுகாவலருக்கு திருவிழா கொண்டாடப்பட வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

2003ம் ஆண்டு முதன் முதலாக இத் திருவிழா எங்கே கொண்டாடுவது? எப்படி கொண்டாடுவது? என்ற கேள்வி எழுந்த போது, ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு ஆலயத்தில் கொண்டாடுவோம், என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. முதல் திருவிழாவை மிக விமரிசையாக கொழும்பு புறக்கோட்டை புனித பிலிப் நேரியார் ஆலயத்தில் கொண்டாட தீர்மானித்து அக்கருத்தை தேவ நற்கருணை சபை குருக்களிடம் தெரிவித்தபோது அவர்கள் மிக அன்புடன் அதற்கான அனுமதியை அளித்தார்கள். அதைத் தொடர்ந்து கடந்த 23 ஆண்டுகளாக இத்திருவிழா மறை மாவட்டத்தின் தமிழ் மக்கள் வாழும் பல ஆலயங்களில் கொண்டாடப்படுவதோடு, மன்றத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டமும் நடத்தப்படுவது பாரம்பரியமாக உருவாகிவந்துள்ளது. அதன்படி திருவிழா நடந்த ஆண்டும், இடமும் சரித்திரப் பதிவாக இங்கே தருவது சாலச்சிறந்தது என நினைக்கின்றேன்.

- ❖2003 புனித பிலிப் நேரியார் ஆலயம்– புறக்கோட்டை
- ❖2004 அன்னை வேளாங்கண்ணி ஆலயம்– செக்கடித்தெரு
- ❖2005 செபமாலை அன்னை ஆலயம் – கொம்பனித் தெரு
- ❖2006 புனித செபஸ்தியார் ஆலயம் – புதுக்கடை
- ❖2007 பாத்திமா அன்னை ஆலயம் – மருதானை
- ❖2008 சமாதானத்தின் இராக்கினி ஆலயம் –மாளிகாவத்தை
- ❖2009 புனித அந்தோனியார் ஆலயம் – கொள்ளுப்பிட்டி
- ❖2010 புனித அந்தோனியார் ஆலயம் – தெமட்டகொடை
- ❖2011 புனித சூசையப்பர் ஆலயம் – கிராண்ட்பாஸ்
- ❖2012 புனித கிளாரட் குருமடம் – நீர்கொழும்பு
- ❖2013 புனித சூசையப்பர் ஆலயம் – கிராண்ட்பாஸ்
- ❖2014 புனித சில்வெஸ்டர் ஆலயம் – ஏத்துக்கால
- ❖2015 திரு இருதய நாதர் ஆலயம் – இராஜகிரிய
- ❖2016 புனித திரேசாள் ஆலயம் – திம்பிரிகஸ்யாய
- ❖2017 சகல புனிதவாளர் ஆலயம் – பொரள்ளை
- ❖2018 புனித கார்மேல் அன்னை ஆலயம் – பள்ளியாவத்தை
- ❖2019 அன்னை வேளாங்கண்ணி மண்டபம் – செக்கடித்தெரு
- ❖2020 அன்னை வேளாங்கண்ணி மண்டபம் – செக்கடித்தெரு
- ❖2021 புனித அந்தோனியார் ஆலயம் – தெமட்டகொடை
- ❖2022 புனித கிளாரட் குருமடம் – நீர்கொழும்பு
- ❖2023 புனித அந்தோனியார் ஆலயம் – கொள்ளுப்பிட்டி
- ❖2024 புனித மார்ட்டின் டீ போரஸ் ஆலயம் – ஹொரன
- ❖2025 புனித மரியாள் திருத்தலம் – மாத்தறை

2025ம் ஆண்டு கொழும்பு மறை மாவட்டத்திற்கு வெளியிலும் போவோம் என்ற திருப்பத்தோடு மாத்தறையை தேர்ந்தெடுத்தோம். அதற்கு பேருதவியாக இருந்த காலி மறை மாவட்ட குரு முதல்வர் மைக்கேல் இராஜேந்திரன் அவர்கட்கும் மறை மாவட்ட ஆயர் ரேமண்ட் ஆண்டகை அவர்கட்கும் மாத்தறை மாதா ஆலய பரிபாலகர் அவர்கட்கும் நன்றி கூறுகின்றோம். இந்த 23 ஆண்டுகளிலும் மன்றத்து இத் திருவிழாக்களை சிறப்புடன் கொண்டாட ஆலயங்கள் தந்த பங்குத்தந்தையர்களுக்கும் நன்றி கூறுகின்றோம். வருகிற ஆண்டு மற்றும் ஒரு ஆலயத்தில் புனித ஜோசப்வாஸ் அடிகளாரின் திருவிழா கொண்டாடுவோம். நீங்களும் வாருங்கள்...

- ஜெஸ்டன் -



நற்செய்தியை ஏற்றுக் கொள்ளாததால், அவர்கள் கடவுளுக்குப் பகைவர்கள் ஆயினர்.



மன்னார்
மறைமாவட்டத்திற்கு
புதிய ஆயராக தெரிவு
செய்யப்பட்டுள்ள
அருட்தந்தை
## ஞானப்பிரகாசம்
## அந்தோனிப்பிள்ளை
அடிகளாருக்கு எமது
வாழ்த்துக்களை
தெரிவித்துக்கொள்கின்றோம்

**18வது திருமண
ஆண்டு விழாவைக்
கொண்டாடும்**

## ஜேசுதாசன் சிசிலியா

**தம்பதியர்
இறைவன் செய்த
அனைத்து
நன்மைகளுக்கும்
ஆசீர்வாதங்களுக்கும்
நன்றி கூருகின்றார்கள்.**



*Jesudasan
&
Ciciliya Family*
19.02.2025






கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றத்தினர் தமது பாதுகாவலராம்
**புனித ஜோசப்வாஸ்** அடிகளாரின் திருவிழாவை
13.01.2025 நோன்மதி தினத்தன்று மாத்தறை,
புனித மரியாள் திருத்தலத்தில் காலி மறைமாவட்ட குருமுதல்வர்
பேரருட்திரு. மைக்கல் இராஜேந்திரன் அடிகளாரின் தலைமையில் கொண்டாடினர்.

# கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட கிரிக்கட் சுற்றுப்போட்டியானது 02.02.2025 அன்று நாராஹேன்பிட்ட சாலிகா மைதானத்தில் நடாத்தப்பட்டது.









ஆண்களே, மனைவியரிடம் அன்பு செலுத்துங்கள். அவர்களைக் கொடுமைப்படுத்தாதீர்கள்.

# ஆண்டவர் அருள் தரும் ஆண்டில் செல்வோம் நம்பிக்கையின் திருப்பயணம்

இனிய ஜூபிலி ஆண்டில்
அழகாய் பதிப்போம் மகிழ்வின் காலடிகள்
ஜூபிலி மகிழ்வின் ஆண்டு
ஆண்டவர் அருள் பொழியும் ஆண்டு
விடுதலை நல்கும் ஆண்டு
ஆசீர் மழையில் நனையும் ஆண்டு

ஆண்டவரின் ஆவி என்மேல் உளது
அவர் எனக்கு அருட்பொழிவு செய்துள்ளார்
என மொழிந்து தம் பணி தொடங்கி
எளியோர் பார்வையற்றோர்
ஒடுக்கப்பட்டோர் சிறைப்பட்டோர்
துன்பம் துயரம் நீங்கி
விடுதலையும் புதுவாழ்வும் பெற
உயிரை கொடுத்து உழைத்த இயேசுவின்
காலடித்தடத்தில் நம் பாதம் பதிப்போம்

இறுக்கமான எண்ணங்கள் தளர்வுற
உடைந்து போன உறவுகள் நலம்பெற
நொறுங்கிய உள்ளங்கள் உருப்பெற
இருள் சூழ்ந்த வாழ்வு ஒளிபெற
வழி தெரியாத பாதைகள் தெளிவுபெற
ஆண்டவர் அருட்கரம் நமை அரவணைக்கும்
என்ற நம்பிக்கையில் பயணம் தொடர்வோம்

- செல்வி த. மேரி பற்றீசியா -

எளியோருக்கு நற்செய்தி சொல்லி
விடுதலையும் புதுவாழ்வும் மகிழ்வும்
வழங்கிய இயேசுவின் அருள்மொழி கேட்டு
பகைமையுணர்வை வேரறுப்போம்
அன்பினால் எம் உளம் நிறைப்போம்
கசப்புணர்வை களைந்திடுவோம்
இனிய உணர்வினால் மலர்ந்திடுவோம்
மனக்காயங்கள் மாற்ற எமை கையளிப்போம்
ஆறுதலான நலம் தரும் வார்த்தைகளால் உடல்
உளத்தில் காயமுற்றோரை ஆற்றுப்படுத்துவோம்

இனி தீர்வே இல்லை என நொந்த
உள்ளத்தைத் தட்டிக்கொடுத்து
மலரச்செய்வோம்
இனி வாழ்ந்து என்ன பயன் என
அழுது வாடுவோரின் துயர்துடைத்து
மகிழச்செய்வோம்
கடவுளும் நம்மை கைவிட்டு விட்டாரே
என வாடும் மனங்களுக்கு நம்பிக்கை
ஒளியூட்டுவோம்

ஆண்டவரின் கொடையாம்
இவ் அருளின் ஆண்டில்
மகிழ்வும் அமைதியும் நலமும் நாமும் பெற்று
பிறரும் பெற்று வாழ உழைக்க
திரு அவையுடன் கரம் கோர்த்து
ஒரு சேர நம்பிக்கையின் திருப்பயணிகளாய்
பயணிப்போம்.



ஆண்டவர் தாம் யாரிடம் அன்பு கொண்டிருக்கிறாரோ, அவர்களைக் கண்டிக்கிறார்.

# கடவுளுக்குரிய பிள்ளைகளாக உருவாகுங்கள்

**“நல்வழியில் நடக்கப் பிள்ளையைப் பழக்கு;முதுமையிலும் அவர் அந்தப் பழக்கத்தை விட்டுவிடமாட்டார்.”**
(நீ.மொ 22:6 )

இன்று பல பிள்ளைகள் சரியான, முறையான வழிகாட்டல் இல்லாமல் தவறான வாழ்க்கை முறைக்குள் சிக்கி சின்னாபின்னமாகிப்போன பல தகவல்களை நாம் பெற்றுக் கொண்டிருக்கின்றோம். சிறுவர்கள் என்ன செய்வது? ஏது செய்வது? என தெரியாமல் சரியானது, முறையானது, பொருத்தமானது, பண்பானது, கடவுளுக்குகந்தது எது எனத் தெரியாமல் தாம் செய்வதெல்லாம் சரி என்ற சிந்தனையில் தவறான நடத்தைக்குள் சென்று பிரச்சினைகளுக்கு முகம்கொடுப்பதை நாம் காணக்கூடியதாகவுமுள்ளது.

தற்போது இலங்கையில் பதின்மவயதுப் பெண் பிள்ளைகளின் கர்ப்ப வீதம் அதிகரித்துக் காணப்படுகின்றது. மேலும் இளவயதிலேயே தற்கொலை செய்பவர்களின் எண்ணிக்கையும் அதிகமாகக் காணப்படுகின்றது. அதிலும் நன்றாக கல்வியில் துலங்கக்கூடிய மாணவ மாணவிகளின் தற்கொலைக்கான முடிவும், முயற்சியும் அதிர்ச்சிக்குரியதாகவே இருக்கிறது. பல பதின்மவயதுப் பிள்ளைகள் பல்வேறு போதைப் பொருட்களுக்கு அடிமைப்பட்டிருக்கிறார்கள். இன்னும் இளம்வயதிலேயே குற்றமிழைத்தவர்களாகப் புனர்வாழ்வு நிலையங்களிலே பலரை அவதானிக்கின்றோம். இவை நாம் வாழும் சமூகத்தில் காணப்படும் பாரிய பிரச்சினைகளாக காணப்படுவதோடு அவை பிள்ளைகளின் உருவாக்கம், மனப்பாங்கு, நற்பண்புகள் தொடர்பான விடையங்களில் சமூக கரிசனையை ஏற்படுத்துகின்றன. அதாவது இந்நிலை பெற்றோர் பிள்ளைகளிடத்தில் கொண்டிருக்கக்கூடிய கரிசனை வளர்ப்பு, உருவாக்கம் தொடர்பாக தெளிவற்றதன்மையைக் கொண்டிருப்பதை கோடிட்டுக்காட்டுகிறது.

தற்கால பிள்ளைகளின் உருவாக்கம், விழுமியம். நற்பண்புகள் சார்பானதாக இருக்கின்றதா என்பது விவாதத்திற்குரியதாகவே காணப்படுகின்றது. இன்றைய போட்டி மிகுந்த உலகப்போக்கு



எதற்கும் போட்டியென்ற யதார்த்தத்துக்குள் பிள்ளைகளைத் தள்ளி நிற்கின்றது. அத்துடன் பிள்ளைகளுக்கு முன்வைக்கப்படும் மாதிரிகள் பெயர், புகழ், பணம், பட்டம், பதவி என்ற எண்ணங்களுக்குள் மட்டும் பிள்ளைகளைச் சுற்றிச் சுழல வைக்கின்றன. பிள்ளைகளுக்கான வகைமாதிரிகளாக தனித்துவமான தியாகமும் அர்ப்பணிப்புமுள்ள நல்ல ஆளுமைகள் காட்டப்படுவதற்கு பதிலாக எப்படி பணம் குறுக்கு வழியில் சம்பாதிக்கலாம்? பெரிய பதவியை பிடிப்பது எப்படி? எனப் போலியானதும் நிலையற்றதுமான உதாரணங்கள் சர்வசாதாரணமாக முன்வைக்கப்படுகின்றன. சமுதாயத்தில் பணம் சம்பாதிப்பதற்கு மனிதன் வணிகப் பொருளாக மாற்றப்பட்டு மனித மாண்பு இல்லாமல் விற்கப்படுகின்ற ஒரு வித்தியாசமான அடிமைத்தனத்தை பார்க்கின்றோம். கல்வி ஒழுக்கமான இறைவனுக்கான வாழ்வை கற்பிப்பதற்குப் பதிலாக பணம், வசதியான வாழ்வு என்பதை மையப்படுத்தி நகர்வது மனிதகுலத்திற்கான சாபக்கேடாகவே உள்ளது. வைத்தியராவது, பொறியியலாளராவது, சட்டத்தரணியாவது, உயர்பட்டங்கள் பெறுவது மக்களுக்கும் நாட்டுக்கும் சேவையாற்றுவதற்கும் பணியாற்றுவதற்கும் என்கின்ற தார்மீகம் மறக்கப்பட்டு, பணம் சம்பாதித்தல், பதவி, புகழ் பெறுதல் என்கின்ற குறுகியவட்டத்துக்குள் நோக்கப்படுவது மானிடப் பண்பை இழப்பதாகும்.

தொடர்ச்சி 17ம் பக்கம்

சகோதர நேயத்தோடு அன்பும் கொண்டு விளங்குமாறு முழு ஆர்வத்தோடு முயற்சி செய்யுங்கள்.

18ம் பக்க தொடர்ச்சி



ஒரு குழந்தை வைத்தியராகவேண்டுமென்றால் அதன் நோக்கும் இலக்கும் ஏழைகளுக்கும், வசதியற்றோருக்கும் வைத்திய சேவையை வழங்க வேண்டுமென்றதாக இருக்கவேண்டும். இதேபோல ஒரு சட்டத்தரணிக்கு நீதிக்காகக் காத்திருப்போருக்கு இல்லாதோர்க்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பது போன்ற விழுமியம் சார்ந்த மனித நேயத்தன்மையே இருக்கவேண்டும். இதுவே இறைவனின் திருவுளம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்நிலையில் கிறிஸ்தவ விசுவாசத்தில் உள்ள பிள்ளைகளின் உருவாக்கம் வழமையான கல்விக்கப்பால் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றும் வகையில் அமைய வேண்டும். இறைமகன் இயேசுவின் வாழ்வு முழுக்கமுழுக்க இறைதந்தையின் திட்டத்தை நிறைவேற்றுகின்ற ஒன்றாகவே இருப்பதை நாம் காண்கின்றோம். அதுமட்டுமல்லாமல் தாய் மரியாளும், புனித சூசையப்பரும் இறை இயேசுவை இறைசித்தத்திற்கமையவே உருவாக்கினார்கள், வளர்த்தார்கள் என்பது கவனிக்கத்தக்கது.

புனித மரியாளும், புனித சூசையப்பரும் பெற்றோராக கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுவதை முதற்கடமையாகக் கொண்டிருந்தார்கள். அதிலும் சிறப்பாக வழமைக்கு மாறான முறையில் கடவுள் கேட்டதை அவர்கள் நிறைவேற்ற நம்பிக்கையோடும், எதிர்நோக்கோடும் முழுமனதுடனே முன்வருகின்றார்கள். இறை இயேசுவின் பிறப்பின் முன்னறிவிப்பின் போது தாய் மரியாள் **“நான் ஆண்டவரின் அடிமை: உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்”** (லூக் 1:38) என தன்னை அர்ப்பணித்தது ஒரு வெளிப்படையான உதாரணமாக அமைகிறது. மேலும் இறைவனால் தேர்ந்துகொள்ளப்படுமளவிற்கு அவரது வாழ்வு கடவுளுடன் நெருங்கியதாக, கடவுளுக்கு அரப்பணமானதாக அமைந்துள்ளது. அவள் ஒரு யூதப் பெண்ணாக கடவுளுக்குரிய காரியங்களில் இணைந்திருந்தார் என்பதைக் கோடிட்டுக்காட்டுகிறது. மேலும் புனித சூசையப்பர் திருக்குடும்பத் தந்தையாக, தலைவராக தேர்ந்துகொள்ளப்பட்டார். அவரும் கடவுளுக்கு உகந்த வாழ்வை வாழ்தாரென்பதும், கடவுளின் வார்த்தைக்கு கட்டுப்பட்டவர் என்பதும் வானதூதர் புனித மரியாள் தூய ஆவியால் கருவுற்றிருப்பது பற்றி அறிவித்தபோது அதைச் சரியாக புரிந்துகொண்டு மரியாவை ஏற்றுக்கொண்டமை அவரது கடவுள் நம்பிக்கையையும், கீழ்ப்படிவையும் நமக்கு சுட்டிக்காட்டுகிறது (மத் 1:24).

திருக்குடும்பத்தில் பெற்றோரினது பங்கு பொறுப்புள்ளதாகவும் காத்திரமானதாகவும் அமைந்தது போல ஒவ்வொரு குடும்பத்திலும் அமைய வேண்டும். பிள்ளைகளின் உருவாக்கம் மற்றும் நடத்தையில் அதிகமாக செல்வாக்குச் செலுத்துபவர்கள் பெற்றோரே. பெற்றோரின் நடத்தை, செபவாழ்வு, வார்த்தைப்பிரயோகம் என்பன பிள்ளைகளின் உருவாக்கத்தில் தாக்கம் செலுத்துகின்றது. அதிலும் கடவுளின் விருப்பத்தை தெரிவு செய்து நிறைவேற்றுவது பெற்றோரின் பண்பாக இருக்கவேண்டும்.

இறைவார்த்தை நமக்கு வாழ்வின் நியமங்களை வழங்குகின்றது. இறைவார்த்தையை நாளாந்த வாழ்வியலோடு சேர்த்துப் பார்ப்பதும் தியானிப்பதும் பிள்ளைகளின் உருவாக்கத்தில் பெரும் பங்கு வகிக்கின்றது. எனவே பிள்ளைகளின் உருவாக்கத்தில் அதிக கவனம் செலுத்துவோம். கடவுளுக்குரிய பிள்ளைகளை உருவாக்கி அன்பும், நீதியும், அமைதியும் நிறைந்த சமூகத்தை கட்டியெழுப்புவோம்.

**“என்பிள்ளைகள் உண்மைக்கேற்பவாழ்ந்து வருகிறார்களெனக் கேள்விப்படுவதைவிட மேலான பெருமகிழ்ச்சி எனக்கு இல்லை.”** (3யோ 1:4)

**அருட்தந்தை அ.வி. அல்பிரெட் அ.ம.தி.**

# மனித மாண்பு தரும் வாழ்வின் பாடங்கள்

**சென்ற இதழின் தொடர்ச்சி...**

**இரண்டாவதாக,**

ஓரினத்திருமணம்- samesex marriage.
ஆண்களும் ஆண்களும் அல்லது பெண்களும் பெண்களும் செய்து கொள்ளும் திருமணம் என்பது இயற்கைக்கு முரணானது. இருப்பினும், இதைத்தான் இன்று உலகம் பல ஊடகங்கள் வழியாக காட்சிப்படுத்தியும், அதை ஊக்கப்படுத்தியும் வருவது உண்மையான மனித மாண்பை அடிப்படையிலே இழக்கச் செய்கின்றது. இது சமூக விரோத நடைமுறைக் குற்றம். பல நாடுகளிலே இதை சட்டபூர்வமான விடயமாக அரசு உருவாக்கிவிட்டது. இதைப்பற்றிய பல கற்கை நெறிகள் உருவாகியும் இவற்றால் கிடைத்த பயன் சொற்பமே. இது எமது நாட்டில் ஆங்காங்கே தலைவிரித்தாடுவதும் தெரிந்ததே.

**மூன்றாவதாக,** இக்காலங்களிலே போதைவஸ்துக்கு அடிமையாகிப் போகின்ற நிலை அதிகமாகவே காணப்படுகின்றது. போதைவஸ்து பாவனை ஒரு தலைமுறையையே முழுவதுமாக அழிக்கின்றது. இதன் பின்னணியில் அரசியல் செல்வாக்கு அதிகம் இருப்பதால் இதனது ஆதிக்கம் இன்னும் அதிகமாக இருக்கின்றது. போதைவஸ்து பாவனையால் கல்வி இழந்து, அந்தஸ்து இழந்து, தொழில் இழந்து, குடும்பம் இழந்து,கௌரவம் இழந்து ஏன் மாண்பிழந்து நிற்கும் மனித சமுதாயம்தான் எம்மைச் சுற்றி இருக்கின்றது. இது மிக கவலையைத்தான் தருகின்றது. களவு அதிகரித்தும், கொலை அதிகரித்தும், பல விழுமியக்கொள்கைகள் இழந்தும் நாம் எமது சமூகத்தை தொலைத்தும் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். இது ஒரு தலைமுறைக்கான அழிப்பு.

**இணையத்தளமும், மனித மாண்பும்**

மனித சிந்தனைகள் எண்பிக்கும் வளர்ச்சி உலகத்தையே கரங்களுக்குள் கொண்டுவரக்கூடியதாய் அமைந்துவிட்டது. மனிதன் சிந்திப்பது எல்லாமே நிஜமாகிவிட்டது. இது எதை நோக்கி செல்லுகின்றது? 2000 ஆண்டிற்கும் 2015ம் ஆண்டிற்குமிடையில் இந்த இணைய வலைத்தளத்தை (Internet) பயன்படுத்திய மக்கள் தொகையானது 400 மில்லியனிலிருந்து 3.2 பில்லியனாக அதிகரித்துள்ளது. இதனது இந்த பாரிய வளர்ச்சி கிட்டத்தட்ட இவ்வுலக சனத்தொகையின் பாதி மடங்காக கணிக்கப்படுகின்றது. இப்பொழுது இந்த இணையத்தளம் அனைத்து இடங்களிலும் கிடைக்கக்கூடியதாய் இருப்பதால், அனைவருமே இதைப் பாவிக்கக் கூடியதாய் இருக்கின்றது. 1960களில் தான் இதனது ஆரம்பம் பதிவிடப்பட்டுள்ளது.

இந்த இணையத்தளத்தினூடாக அறியக்கூடிய அனைத்து விடயங்களும் எமது சிந்தனையை கற்பனாசக்தியை அளவுகடந்த முறையிலே அதிகரிக்கின்றது. தொடர்பாடல் என்பது அடிப்படை சமூக முறையாகும். மிக முக்கியமான அடிப்படை தேவைகளில் ஒன்றாகவும் காணப்படுகின்றது. தொடர்புகொள்வது ஒவ்வொருவரின் தார்மீகக் கடமை. இதனால் பெறும் அனுபவமும், அறிவும் தவிர்க்கமுடியாதவை. 2010, 2011ம் ஆண்டுகளில் மத்திய கிழக்கு மற்றும் தென் ஆபிரிக்க நாடுகளை இணையத்தள பட்டியலில் “முக நூல் புரட்சியாகவும்”, “டுவிற்றர் புரட்சியாகவும்”, கொண்டு இணைத்துள்ளனர். இதற்கான காரணமாக இந்த ஆண்டுகளில் அதனுடைய பாவனை விகிதம் அதிகரித்தமையே. எகிப்து நாட்டிலே சில நாட்களுக்கு இந்த இணையத்தளத்தை நிறுத்திவைக்க தீர்மானித்து அதை நடைமுறைப்படுத்தினர்.

இதனால் அங்கே ஏற்பட்ட பாரிய நெருக்கடிகளுக்கு அந்நாட்டு அரசாங்கம் ஈடுகொடுக்க முடியாமல் போனது. இதை அந்நாட்டு மக்கள் மனித உரிமை மீறலாகவே கருதினர். இணைய வலைத்தளம் எவ்வளவு தூரம் வளர்ந்திருக்கின்றதோ அவ்வளவு தூரம் அதனது தவறான பாவனையும் அதிகரித்துள்ளது. இன்று முகநூலின் பாவனை 1.9 பில்லியன் அங்கத்தவர்களைக் கொண்டிருப்பதாக பதிவுசெய்யப்பட்டிருக்கின்றது. இதில் அதிக பாவனையாளர்களைக் கொண்ட நாடாக இந்தியாவே காணப்படுகின்றது. இவ்விணையத்தளத்தினால் பலரது வாழ்வுக்கான தெளிவும் அதனால் பல வெற்றியும் கிடைக்கப்பட்டுள்ளது. வாழ்க்கையில் அடையமுடியாத வெற்றியை இணையத்தளம் பெற்றுக்கொடுத்திருக்கின்றது.

**தொடர்ச்சி 22ம் பக்கம்**

# ஆதித்திருச்சபையில் கற்றுக்கொள்ளும் கிறிஸ்தவம் – தொடர் கட்டுரை –

### உரோமையர் 9ஆம் அதிகாரம்

**"என் மக்கள் அல்லாதோரை நோக்கி என் மக்கள் நீங்கள்" என்று அழைப்பேன்.** என்கிறார் இறைவன். பிறப்பிலும் வளர்ப்பிலும் கிறிஸ்தவர்களாய் இருப்பவர்கள் மட்டுமன்றி இந்த உலகின் சகல படைப்புகள் மீதும் இறைவன் அன்புகொள்கிறார். இரக்கம் காட்டுகிறார். அவரை அறிந்தவர்களும் ஆராதிப்பவர்களும் **"கடவுள் எங்கள் உரிமைசொத்து"** என்று உரிமைபாராட்ட முடியாது. தமது நிகரில்லா அன்பினை வெளிப்படுத்தி அனைவரையும் தன்னகத்தே சேர்த்துக்கொள்ள இறைவன் விரும்புகிறார். மீட்பின் நற்செய்தியை உலகம் முழுவதும் அறிவித்து அனைவரையுமே நிலையில்லா வாழ்விற்கு இட்டு செல்வதற்காகவே இறைவன் நம்மைத் தேர்ந்துள்ளார்.



இப்பணியினை அவருக்காக செயல்படுத்த அவர் எவரையேனும் தேர்ந்துகொள்வார். நாம் அனைவருமே அவருக்குரியவர்கள். ஆனால் நாம் மட்டுமே மீட்பை கண்டோம், எமக்கு மட்டுமே பரலோகம் என்று நாம் மார்தட்டி கொள்ளமுடியாது. இறைவன் அனைவருக்கானவர். அனைவரும் இறைவனுக்கு உரியவர்கள். இந்தமனநிலையுடன் அனைத்து மக்களையும் கடவுளின் மக்களாக ஏற்றுக்கொள்வோம்.

**தொடரும்.**

**– திருமதி. கோமஸ் –**

# தவக்காலம்



**இவ்வருடம் கத்தோலிக்க நாட்காட்டியின்படி தவக்காலமானது மார்ச் மாதம் 5ம் திகதி விபூதிப்புதனுடன் ஆரம்பமாகிறது. மனமாற்றத்தின் காலமான இத்தவக்காலமானது கத்தோலிக்கர்களாகிய எமக்கு எமது வாழ்வை சற்று ஆராய்ந்து பார்த்து நமது பாவங்களைக்களையவும், பிறர் சிநேகமுள்ளோராய் வாழவும், உண்மையான மனமாற்றத்தை அடையவும் அழைப்பு விடுக்கின்றது. அவ் அழைப்பை ஏற்று உண்மையான மனமாற்றத்தை காண ஆயத்தமாவோம். தவ முயற்சிகளை மேற்கொண்டு தான தர்மங்கள் செய்து உண்மையான கிறிஸ்தவர்களாக வாழ முயற்சிப்போம்.**

# பைபிள் ஹீரோக்கள்

தொடர்ச்சி..... 19

சிறுவர்களே! உங்களுக்காக

ஆக்கம் : இவஞ்ஜலிஸ்டா வினோலிசன்

# சிம்சோன்

மனோவாகு எனும் ஒருவர் இருந்தார். அவருக்கு பிள்ளைகள் இல்லை. ஒருநாள் அவர் மனைவியின் முன் ஒரு வானதூதர் தோன்றி, ‘உனக்கு ஒரு மகன் பிறப்பான் அவனுக்கு திராட்சை இரசம், மதுபானம் தீட்டான உணவு எதுவும் கொடுக்க கூடாது. அத்தோடு அவன் தலைமுடியை வெட்டக்கூடாது என்று சொல்லி மறைந்துவிட்டார்.





இந்த சந்தோஷ செய்தியை தன் கணவனிடம் சொல்ல மனோவாகுவின் மனைவி விரைந்து ஓடினாள்.

மனோவாகு தன் மனைவி கூறியதை கேட்டு, தாம் என்ன செய்யவேண்டும் எனக் கேட்டு, அத்தூதரை மீண்டும் அனுப்பும்படி ஆண்ட வரிடம் மன்றாடினார். தூதரும் தோன்றினார்.



ஆண்டவருக்கு நன்றிப்பலி ஒப்புக்கொடுக்க கூறினார். அப்போது பலி பீடத்திலிருந்து எழுந்த புகையோடு, தூதரும் மேல் நோக்கிச் சென்றார்.





அதன் பின் மனோவாகுவின் மனைவி ஓர் ஆண் மகனைப் பெற்று, அதற்கு ‘சிம்சோன்’ எனப் பெயரிட்டாள்.

நான் உம்மீது நம்பிக்கை வைத்துள்ளேன் “நீரே என் கடவுள்”

# குறுக்கெழுத்துப்போட்டி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

**மேலிருந்து கீழ்**

1 : இறைவன் இது மாறாதவர்.

4 : புனித ஸ்தேவான் இதனால் எறிந்து கொல்லப்பட்டார். (தலைகீழ்)

6 : இயேசு இதிலே பயணம் செய்யும்போது காற்றையும் கடலையும் அடக்கினார்.

11 : “அழகு” என்றும் கூறலாம். (தலைகீழ்)

15 : “பெயர்” என்றும் கூறலாம்.

22 : தைரியத்தின் மறு பெயர்.

25 : “மலை” யின் எதிர்பதம்.

30 : சாதுவான விலங்கு.

**இடமிருந்து வலம்**

1 - நோவாவிற்கு இறைவன் வழங்கிய உடன்படிக்கை

10 - இஸ்ராயேல் மக்களை இதனை இரண்டாகப் பிரித்து இறைவன் கரைசேர்த்தார். (இடம்மாறியுள்ளது)

13 - நரம்பில்லாத உடலுறுப்பு (இடம்மாறியுள்ளது)

17 - மண்ணைத் தோண்டினால் இது உருவாகும். (இடம்மாறியுள்ளது)

21 - “நமது” என்றும் கூறலாம் (இடம்மாறியுள்ளது)

31 - இடையனுக்கு செவிசாய்க்கும் மந்தை. (இடம்மாறியுள்ளது)

## குறுக்கெழுத்துப்போட்டி

**முன்னைய இதழின் விடைகள்**

**மேலிருந்து கீழ்**

1. பரபாஸ்
3. வைரம்
6. கரம்
16. தேவன்
26. மணி
29. கலை
30. மனு

**இடமிருந்து வலம்**

1. பறவை
5. கல்
13. பாலும்தேனும்
26. மனுமகன்
35. மலை

## “தாய்” வாசக நெஞ்சங்களே!

தற்போது “தாய்” சஞ்சிகையை www.colombostjosephvazmandram.lk என்ற இணையதளத்தின் ஊடாகவும் நீங்கள் காணலாம் என்பதை அறியத் தருகின்றோம். இதன்மூலமாக வெளிநாட்டில் உள்ளவர்களும் இத் தாய் சஞ்சிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

## கிரிக்கட் சுற்றுப்போட்டிகள்

கத்தோலிக்க இளைஞர்களுக்கிடையேயான கிரிக்கட் சுற்றுப்போட்டியொன்று பெப்ரவரி 2ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நாராஹேன்பிட்ட சாலிகா மைதானத்தில் கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கொழும்பு உயர் மறை மாவட்ட துணை ஆயர் மேதகு என்டன் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் இச்சுற்றுப் போட்டிகளை ஆரம்பித்து வைத்தார்கள். பதினேழு அணிகள் இதில் கலந்து கொண்டனர். வெவ்வேறு இடங்களிலுமிருந்து இளைஞர்கள் குழுக்களாக களம் இறங்கினார்கள். இப்போட்டியானது கத்தோலிக்க இளைஞர்கள் மத்தியில் ஒற்றுமையையும் நட்புறவையும் கொண்டுவரக் கூடியதாக அமைந்தது. காலை 8.00 மணிக்கு ஆரம்பமான இச்சுற்றுப்போட்டியானது மாலை 5.00 மணிக்கு இறுதிச்சுற்றுடன் நிறைவுபெற்றது.

நீ நம்பிக்கை இழப்பது ஏன்? நீ கலக்கமுறுவது ஏன்? கடவுளையே நம்பியிரு.

## யூபிலி ஆண்டில்....

5ம் பக்க தொடர்ச்சி

9. ஏழைகள் கைவிடப்பட்டவர்கள் கைம்பெண்களுக்கு எதிர்நோக்கு வழங்குதல்.

10. கிறிஸ்தவ வாழ்வு துன்பங்களால் அணி செய்யப்படுவது. எனவே துன்பங்களை மன உறுதியோடு ஏற்று மறைசாட்சிகள் போன்று கடவுள் தரும் பரிசை நோக்கி எதிர்நோக்கோடு முன்னேறுதல்.

நான் இந்த யூபிலி ஆண்டில் எவ்வாறு பயணிக்கலாம் என்பதற்கு மேற்கூறப்பட்டவை வழிகாட்டுதலாக இருக்கிறது. எனவே இந்த யூபிலி ஆண்டில் முக்கியமாக நான் பாவ அறிக்கை செய்து பிறரை மன்னிக்க பழகுவேன். இறைவனோடும் அயலாரோடும் உறவை ஏற்படுத்துவேன். அத்தோடு மேற்குறிப்பிட்ட வாழ்வின் பல்வேறுபட்ட நிலைகளிலே எதிர்நோக்கை இழந்து தவிக்கின்ற ஒருவருக்கேனும் எதிர்நோக்கை கொடுப்பேன்.

பிறந்திருக்கின்ற இந்த புதிய யூபிலி ஆண்டிலே பாலக இயேசுவின் அருள் பெற்று இறையரசை நோக்கிய வாழ்வு வாழவும், இவ் ஆண்டு தருகின்ற பரிபூரண பலனை இழந்துவிடாது பெற்றுக்கொள்ள முயற்சிப்போம். யூபிலி ஆண்டை அருளின், மகிழ்ச்சியின், மறுமலர்ச்சியின் ஆண்டாக மாற்றுவோம். தனிப்பட்ட ரீதியில் இதை ஆரம்பித்து சமூகத்திலே திருஅவை முழுவதும் அதை பரவவிடுகின்ற வானகத்தந்தையின் மகனாக மகளாக மாறுவோம்.

உங்கள் அனைவருக்கும் இது ஆசீர் நிறைந்த யூபிலி ஆண்டாக அமைய வாழ்த்துகின்றேன்.

**ஆக்கம் : அருட்பணி ம. பிராங்டஃவ் IVDEI. திருவுளசபை சிறியகுருமட அதிபர், யாழ்ப்பாணம்.**

## மனித மாண்பு தரும் வாழ்வின் பாடங்கள்....

18ம் பக்க தொடர்ச்சி

அதேவேளை இதனது தவறுதலான பாவனையால் பல மோசடிகளும் இடம்பெற்று வருவது எமக்கு நன்றாகவே தெரியும். இதனால் மனித மாண்பை இழக்கச் செய்யக்கூடிய அளவுக்கு இதனது பாவனை தவறுதலாகவே அமையலாம்.

**இறுதியாக...**

“மனிதம் மலர்ந்திட வேண்டும், மனித மாண்புகள் உயர்ந்திட வேண்டும், இறைமையின் சாயலே மனிதம்” என்று பல வருடங்களுக்கு முன்பே கேட்ட அழகான கிறிஸ்தவ பாடல் வரிகள் என் ஞாபகத்தில் வருகின்றது. மனித உருவிலே இறைவனை காண்பது என்பது எமது மாண்பை ஆழப்படுத்துகின்றது பெறுமதியுள்ளதாக மாற்றுகின்றது. நாம் மகிழ்வோடு இருக்கவேண்டும், ஒழுக்க சீலர்களாக இருக்கவேண்டும், பலரின் மரியாதைக்கும், பணிவுக்கும் பாத்திரமாக இருக்க வேண்டும் என்பதுதான் எமது வாழ்வின் அடிப்படை கருப்பொருளாகின்றது. மனிதனை சுற்றியுள்ள அனைத்து அம்சங்களும் அவனது மாண்பை குலைக்கக்கூடாது. எம்மை சுற்றியுள்ள உலகம் மாசுபடிந்த உலகம். பிழையை பிழையாக பார்க்க தவறும் உலகம். மனிதனது ஆளுமையை தனித்துவத்தை அறிந்து மதிக்கத் தெரியாத உலகம். இது மாறவேண்டும். இது மாறவேண்டுமென்றால் அதற்கு ஒரே வழி - கல்வி தான்.

மனிதனுக்கு மாண்பை உணரச் செய்வதும், மாண்பை கொடுப்பதும் கல்வியால் மாத்திரமே முடியும்.

உசாத்துணை நூல்கள்:
Ed. Edward Sieh, Judy McGregor, Human Dignity - Establishing Worth and Seeking Solutions Palgrave Macmillan UK, 2017.

Ed. Jeff Malpas, Norelle Lickiss, Perspectives on Human Dignity: A Conversation, Springer, 2007.

George Kateb,Human dignity, Belknap Press of Harvard University Press, Year: 2011.
https://backlinko.com/facebook-users accessed on 22nd January, 2022.

**முற்றும்.**

S. ஜேம்ஸ் சுரேந்திரராஜா. *OMI*
பிரான்ஸ்



நீரே என் புகலிடம், நீரே என் கேடயம், உமது வாக்கில் நான் நம்பிக்கை வைக்கின்றேன்.


9.2.2025
தனது 6வது
பிறந்தநாளைக் கொண்டாடும்
CLIVE LEVIN
பல்கலையும் கற்று பல்லாண்டு
வாழ வாழ்த்துகின்றோம்!




No. 51, 59, 60. People's Park Shopping Complex,Colombo - 11.

Tel: 011-2541041, 011 4325243. Fax: 011 2440800. Frame Shop: 011 4325242.


"மறை வளர ஒன்றிணைவோம்"


இச்சஞ்சிகை அருட்பணி. ஆனந்த பெர்னாண்டோபுள்ளே அடிகளாரால் 31.01.2025 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.

*Printed by : JRCA Digital Graphic (Pvt) Ltd., No. 78, Brass Founder Street, Colombo - 13. :077 177 6646 : 075 777 6646*